3. கவன ஈர்ப்பு

கிருஷ்ணகிரி ஓசூர் தேசிய நெடுஞ்சாலையில் விபத்துகள் நடப்பதால் அப்பகுதியில் மருத்துவக் கல்லூரி தொடங்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. டி. செங்குட்டுவன், திரு. சி.வி. இராஜேந்திரன் ஆகியோரில் ஒருவர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன் அவர்கள். (குறுக்கீடு) உட்காருங்கள்.*

முற்பகல் 10-50

திரு. டி. செங்குட்டுவன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கிருஷ்ணகிரி—ஓசூர் தேசிய நெடுஞ்சாலையில் அடிக்கடி விபத்துகள் நடப்பதால் அப்பகுதியில் மருத்துவக் கல்லூரி ஒன்றை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விரிவான விவர அறிக்கை ஒன்று அவையில் வைக்கப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

அறிக்கை

அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை இல்லாத மாவட்டங்களில் அங்கு செயல்பட்டு வரும் மாவட்டத் தலைமை மருத்துவமனைகள் மருத்துவக் கல்வி மருத்துவமனைகளுக்கு இணையாக வலுப்படுத்தப்படும் என்று அரசு வெளியிட்ட

அறிவிப்பிற்கிணங்க, 16 மாவட்டத் தலைமை மருத்துவமனைகளை வலுப்படுத்த 78.89 கோடி ரூபாய் நிதி வழங்கி, 19–5–2014 அன்று அரசாணை வெளியிடப்பட்டது. இதில் கிருஷ்ணகிரி மாவட்டத் தலைமை மருத்துவமனைக்குக் கட்டடங்களுக்காக ரூபாய் 33 இலட்சமும், உபகரணங்களுக்காக ரூ.3 கோடியே 61 இலட்சமும், மரத் தளவாடங்களுக்காக ரூபாய் 17.20 இலட்சமும், லினனுக்காக ரூபாய் 15.38 இலட்சமும், மொத்தம் 4 கோடியே 27 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டு இதற்கான பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

இந்த ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் விபத்து மற்றும் தலைக்காய சிகிச்சைகளை நன்கு உணர்ந்து, இத்தகைய பிரிவுகளை ரூபாய் 10 கோடி மதிப்பீட்டில் வலுப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கிருஷ்ணகிரி மாவட்டத் தலைமை மருத்துவமனையில் தற்போது இயங்கிவரும் விபத்து மற்றும் தலைக்காய சிகிச்சைப் பிரிவுக்கு எம்.ஆர்.ஐ. ஸ்கேன் மற்றும் இதர மருத்துவக் கருவிகள் வழங்கி வலுப்படுத்தப்படவுள்ளது.

கிருஷ்ணகிரி மாவட்டத் தலைமை மருத்துவமனைக்கு 7 உயர் சிறப்பு மருத்துவர்களும், 16 சிறப்பு மருத்துவர்கள் மற்றும் மருத்துவர் பணியிடங்கள் மற்றும் 37 செவிலியர் பணியிடங்களும் ஒப்பளிக்கப்பட்டு, நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

மேலும், தேசிய நலவாழ்வு குழும நிதியிலிருந்து, கிருஷ்ணகிரி மாவட்டத் தலைமை மருத்துவமனையில் மகப்பேறுக்குப் பிந்தைய சிகிச்சைப் பிரிவு 1 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ளது. மேலும், குழந்தைகள் பிரிவு, 'சீமாங்க்' மையம் மற்றும் புறநோயாளிகள் பிரிவு ஆகியவை சுமார் 50 இலட்சம் ரூபாய் செலவில் புதுப்பிக்கப்பட்டுள்ளன. இதுதவிர, இங்கு மாவட்ட ஆரம்ப சிகிச்சை மையம் (District Early Intervention Centre) 95 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்படவுள்ளது.

விபத்து அதிகம் ஏற்படும் இடமான கிருஷ்ணகிரி–ஓசூர் தேசிய நெடுஞ்சாலையில் உயிர் பாதுகாப்பு முதலுதவி சேவையை மேம்படுத்தும் விதமாக கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 21 அவசரகால ஊர்திகள் இயக்கப்பட்டு வருகின்றன. புவிசார் தகவல் வரைபடங்களின் (GIS) வாயிலாக மிக அதிக விபத்துப்

2016 ஆகஸ்ட் 11] [டாக்டர் சி. விஜய பாஸ்கர்]

பகுதிகளைக் கண்டறிந்து, கிருஷ்ணகிரி முதல் ஓசூர் வரையிலான (60 கிலோ மீட்டர்) தேசிய நெடுஞ்சாலையில், 108 அவசரகால ஊர்திகளைக் கூடுதலாகவும் மற்றும் இடமாற்றம் செய்ததன்மூலம் மிக துரிதமாக விபத்துப் பகுதிகளைச் சென்றடைந்து, விபத்துக்குள்ளானவர்களுக்கு முதலுதவி அளித்து, தீவிர சிகிச்சைக்காக அரசு மருத்துவமனைகளுக்குக் கொண்டு செல்லப்படுகின்றனர். 5 சதுர கிலோ மீட்டர் சுற்றளவில் தேசிய நெடுஞ்சாலையில் ஓசூர், பேரண்டபள்ளி, சூளகிரி, குருபரபள்ளி, கிருஷ்ணகிரி ஆகிய இடங்களில் தலா ஓர் அவசர கால ஊர்தி நிறுத்தப்பட்டுள்ளது.

மருத்துவக் கல்லூரி இல்லாத மாவட்டங்களில் படிப்படியாக மருத்துவக் கல்லூரி துவக்க வேண்டும் என்பது அரசின் கொள்கை முடிவாகும். அதனடிப்படையில், ஆண்டுதோறும் மருத்துவக் கல்லூரிகள் தொடங்கப்பட்டு வருகின்றன. 2012–2013 ஆம் கல்வியாண்டு முதல் சிவகங்கை மாவட்டத்தில் ஒரு மருத்துவக் கல்லூரியும், 2013–2014 ஆம் கல்வியாண்டு முதல் திருவண்ணாமலை மாவட்டத்தில் ஒரு மருத்துவக் கல்லூரியும் துவங்கப்பட்டுள்ளன. சென்னை, ஓமந்தூரார் அரசினர் தோட்ட வளாகத்தில் உள்ள 'பி' பிரிவு கட்டடத்தில் புதிய அரசு மருத்துவக் கல்லூரி 100 இடங்களுடன் 2015–2016 ஆம் கல்வி ஆண்டு முதல் தொடங்க, இந்திய மருத்துவக் குழுமத்தின் அனுமதி பெறப்பட்டு, மாணவர் சேர்க்கை நடைபெற்றுள்ளது. இந்த மருத்துவக் கல்லூரிக்கான புதிய கட்டடங்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 7–9–2015 அன்று திறக்கப்பட்டு, மருத்துவக் கல்லூரி செயல்பட்டு வருகிறது. மத்திய அரசிடமிருந்து ஒப்படைப்பு பெறப்பட்டு 2016–2017 ஆம் ஆண்டு முதல் கோயம்புத்தூர் மாவட்டத்தில் ஓர் அரசு மருத்துவக் கல்லூரி மற்றும் இ.எஸ்.ஐ.சி. மருத்துவமனை, 100 மாணவர்கள் சேர்க்கைக்கு இந்திய மருத்துவக் குழுமத்தின் ஒப்புதலுடன் துவக்கப்பட்டு நடைபெற்று வருகின்றது. மேலும், கரூர் மாவட்டத்தில் அரசு மற்றும் தனியார் மருத்துவக் கல்லூரி ஏதும் இல்லை என்பதால் கரூர் மாவட்டத்தில் 150 எம்.பி.பி.எஸ். மாணவர்கள் சேர்க்கையுடன் புதிதாக அரசு மருத்துவக் கல்லூரி அமைக்க அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. இதற்காக சிறப்பு அலுவலர்/முதல்வர் பணியிடம் உருவாக்கப்பட்டுள்ளது. புதிய மருத்துவக் கல்லூரி தொடங்குவதற்குத் தேவையான கட்டடம் மற்றும் மருத்துவமனைக் கட்டடங்கள் 229.46 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்ட நிருவாக

ஒப்புதல் மற்றும் நிதி ஒப்பளிப்பு 30–11–2015 அன்று வெளியிடப்பட்டுள்ளது. இது மட்டுமின்றி, புதுக்கோட்டையில் ஓர் அரசு மருத்துவக் கல்லூரி தொடங்கப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேரவை விதி எண் 110–ன்கீழ் சட்டமன்றப் பேரவையில் 25–8–2015 அன்று அறிவித்தார்கள். புதுக்கோட்டையில் 150 எம்.பி.பி.எஸ். மாணவர்கள் சேர்க்கையுடன் புதிதாக அரசு மருத்துவக் கல்லூரி அமைக்க அரசாணை 2–11–2015 அன்று வெளியிடப்பட்டது. இதற்கான சிறப்பு அலுவலர்/முதல்வர் நியமனம் செய்யப்பட்டுள்ளார். புதிய மருத்துவக் கல்லூரி கட்டடம் மற்றும் மருத்துவமனைக் கட்டடங்கள் கட்ட நிருவாக அனுமதி மற்றும் தேவையான நிதி 229.46 கோடி ரூபாய் ஒதுக்கி அரசாணை 31–12–2015 அன்று வெளியிடப்பட்டுள்ளது. தற்போது கட்டடப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

தற்போது தமிழ்நாட்டில் 21 அரசு மருத்துவக் கல்லூரிகளும், தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகத்தினால் (ESI) நடத்தப்படும் மருத்துவக் கல்லூரி ஒன்றும் (மத்திய அரசு நிறுவனம்), பெருந்துறையில் சாலை போக்குவரத்து நிறுவனம் நடத்தும் மருத்துவக் கல்லூரி ஒன்றும் (தமிழக அரசு நிறுவனம்), 13 தனியார் மருத்துவக் கல்லூரிகளும் உள்ளன. மேலும், தமிழக அரசினால் நிருவகிக்கப்படும் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலும், 8 தனியார் நிகர்நிலைப் பல்கலைக்கழகங்களிலும் மருத்துவப் படிப்பு நடத்தப்படுகிறது.

கிருஷ்ணகிரியின் அண்டை மாவட்டங்கள் சேலம் மற்றும் தருமபுரி ஆகும். சேலத்தில் அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரியும், தருமபுரியில் அரசு தருமபுரி மருத்துவக் கல்லூரியும் தலா 100 எம்.பி.பி.எஸ். மாணவர்கள் சேர்க்கையுடன் நடைபெற்று வருகின்றன.

அதாவது, ஒட்டுமொத்தத்தில் மொத்தமுள்ள 32 மாவட்டங்களில், 17 மாவட்டங்களில் 21 அரசு மருத்துவக் கல்லூரிகள் செயல்பட்டு வருகின்றன. கிருஷ்ணகிரி உட்பட மீதமுள்ள 13 மாவட்டங்களில் அரசு மருத்துவக் கல்லூரிகள் தற்போது இல்லை மற்றும் அதிலுள்ள 10 மாவட்டங்களில் தனியார் மருத்துவக் கல்லூரிகளும் இல்லை. மருத்துவக் கல்லூரி இல்லாத மாவட்டங்களில் படிப்படியாக மருத்துவக் கல்லூரி துவக்க வேண்டும் என்பது அரசின் கொள்கை முடிவாகும்.

2016 ஆகஸ்ட் 11] [டாக்டர் சி. விஜய பாஸ்கர்]

எனவே, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் மருத்துவக் கல்லூரி அமைப்பது குறித்து அரசின் கொள்கைக்கேற்ப மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுரை பெற்று கிருஷ்ணகிரி மற்றும் மருத்துவக் கல்லூரிகள் இல்லாத பிற மாவட்டங்களிலும் படிப்படியாக புதிய மருத்துவக் கல்லூரிகள் தொடங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன் அவர்கள்.*

திரு. டி. செங்குட்டுவன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையைப் படித்துப் பார்த்தேன். விவர அறிக்கையில் கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனைக்குப் புதிய கட்டடங்கள் கட்டவும், மருத்துவ உபகரணங்கள் வாங்கவும் ரூ.4.27 கோடி ஒதுக்கப்பட்டு பணிகள் நடைபெற்றுள்ளதாகவும், கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனையில் இயங்கிவரும் விபத்து அவசர சிகிச்சைப் பிரிவு மையத்திற்கு எம்.ஆர்.ஐ. ஸ்கேன் வாங்க முடிவு எடுக்கப்பட்டுள்ளதாகவும், 7 உயர் சிறப்பு மருத்துவர்கள், 16 சிறப்பு மருத்துவர்கள், 37 செவிலியர்கள் நியமிக்கப்பட்டுள்ளதாகவும், கிருஷ்ணகிரி—ஒசூர் தேசிய நெடுஞ்சாலையில் அதிகமாக 108 அவசரகால ஊர்திகள் இயக்கப்படுவதாகவும் கூறப்பட்டிருக்கிறது. இருப்பினும் கடந்த காலங்களில் ஏற்பட்ட விபத்துகளில் அடிபட்டவர்களில் அதிகமானோரை கிருஷ்ணகிரி மருத்துவமனைக்குக் கொண்டு வந்து, கிருஷ்ணகிரி மருத்துவமனையிலிருந்து பெங்களூரு, சேலம், தருமபுரி, வேலூர் பகுதிகளில் உள்ள அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளுக்குத்தான் அதிகமாக* refer *செய்திருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.*

கிருஷ்ணகிரி மாவட்டம் என்பது கர்நாடக மாநில எல்லையை ஒட்டியும், வடக்கே ஆந்திர மாநில எல்லையை ஒட்டியும் உள்ள மாவட்டம். கிருஷ்ணகிரி மாவட்டம் வழியாக வட மாவட்டங்களிலிருந்து வரும் ஆறு வழிச் சாலை சென்னை வரையிலும், கன்னியாகுமரி, திருச்சி, கோவை, பாண்டிச்சேரி உள்ளிட்ட பல்வேறு ஊர்களுக்கு நான்கு வழிச் சாலையாகவும் அதேபோல ஆந்திரா, ஒடிசா உள்ளிட்ட இந்தியாவின் வட கிழக்கு மாநிலங்களுக்குச் செல்லும் பல்வேறு சாலைகளும் கிருஷ்ணகிரி மாவட்டம் வழியாகத்தான் சென்றுகொண்டிருக்கின்றன.

இந்த மாவட்டத்தின் வழியாகச் செல்லும் ஆறு வழி, நான்கு வழிச் சாலைகளைப் பயன்படுத்தித்தான் அதிகமான வாகனப் போக்குவரத்து கர்நாடக மாநிலம் வழியாக வட மாவட்டங்களுக்கும், வட மாவட்டங்களிலிருந்து கிருஷ்ணகிரி மாவட்டம் வழியாகத் தமிழகத்திற்கும் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அதேபோல தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து கிருஷ்ணகிரி மாவட்டம் வழியாக ஆந்திரா, ஒடிசா போன்ற இந்தியாவின் வட மாநிலங்களுக்கும் சென்று கொண்டிருக்கிறது. கிருஷ்ணகிரி—ஓசூர் தேசிய நெடுஞ்சாலை வழியாகத்தான் அதிகமாக வாகனங்கள் வந்து, சென்று கொண்டிருக்கின்றன. ஒரு நாளைக்கு உள்ளூர் வாகனங்களையும் சேர்த்தால் இரண்டு மாநிலங்களுக்கும் கிருஷ்ணகிரி மாவட்டம் வழியாக மட்டும் சுமார் 25 ஆயிரத்திலிருந்து 30 ஆயிரம் வாகனங்கள் சென்று, வந்து கொண்டிருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் செங்குட்டுவன், நீங்கள் பழைய உறுப்பினர், சுருக்கமாகக் கேளுங்கள்.*

திரு. டி. செங்குட்டுவன்: *பல்வேறு காரணங்களினால் அடிக்கடி கொடிய விபத்துகள் ஏற்பட்டு, உயிர்ச் சேதங்கள் ஏற்படுவதோடு, பல ஆயிரக்கணக்கானோர் கை, கால்களை இழந்து வாழ்நாள் முழுவதும் ஊனமுற்றவர்களாக தங்கள் வாழ்க்கையைக் கழிக்க வேண்டிய துர்பாக்கிய நிலைக்குத் தள்ளப்படுகிறார்கள். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கிருஷ்ணகிரி—ஓசூர் தேசிய நெடுஞ்சாலையில் ஓர் அரசு மருத்துவக் கல்லூரி உருவாக்கித் தந்து, ஏற்படுகின்ற விபத்துகளைத் தடுப்பதற்கு ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.வி. இராஜேந்திரன் அவர்கள்.*

திரு. சி.வி. இராஜேந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'மக்களால் நான், மக்களுக்காக நான்' என்ற தாரக மந்திரத்தோடு நல்லாட்சி நடத்துகின்ற தாயை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) 'தட்டுங்கள் திறக்கப்படும், கேளுங்கள் கொடுக்கப்படும்' என்பது ஏசுபிரானின் கூற்று. கேட்காமலே கொடுக்கின்ற வள்ளல் குணம் படைத்த தமிழக முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு எனது*

2016 ஆகஸ்ட் 11] [திரு. சி.வி. இராஜேந்திரன்]

கோடானுகோடி நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். 'மக்கள் நலனே தன் நலன்' என்று கடந்த 5 ஆண்டு கால ஆட்சியில் மருத்துவத் துறையில் புரட்சிகளைப் படைத்திட்டு, குறிப்பாக மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தைக் கொண்டுவந்து, குறிப்பாக பாமர மக்கள், அரசு ஊழியர்கள் என இலட்சக்கணக்கானவர்கள் உயிர் காக்கும் சிகிச்சை பெறுவதற்காக வழிவகுத்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 10—55

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆட்சிக் காலத்திலே 'மாவட்டத்திற்கு ஒரு மருத்துவமனை அமைக்கப்படும்' என்று மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதன் அடிப்படையில், கிருஷ்ணகிரி நகரமானது, ஆந்திரா, கர்நாடகா, கேரளா, குஜராத் போன்ற வட மாநிலங்களுக்குச் செல்லும் அனைத்து தேசிய நெடுஞ்சாலைகளும் ஒன்று சேருகின்ற இடமாகும். அந்தத் தேசிய நெடுஞ்சாலையில், அடிக்கடி ஏற்படும் சாலை விபத்துகளில் பலத்த காயமடைந்து, உயிருக்குப் போராடும் நோயாளிகளைக் காப்பாற்ற, சுமார் 100 கிலோ மீட்டர் அப்பாலுள்ள பெங்களூரு, சேலம், வேலூர், தருமபுரி போன்ற நகரங்களில் உள்ள மருத்துவமனைகளுக்கு எடுத்துச் செல்லும்போது, வழியிலேயே உயிர் பிரியும் அபாயம் உள்ளது. எனவே, உடனடியாக அவர்களுக்குச் சிகிச்சை அளிக்க நடப்பு நிதியாண்டிலேயே கிருஷ்ணகிரியை தலைமையிடமாகக் கொண்டு, மருத்துவமனையுடன்கூடிய மருத்துவக் கல்லூரி வழங்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று, அங்கு மருத்துவமனை அமைத்திட வேண்டியதன் அவசியத்தை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்த்து அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதியில் அடிக்கடி விபத்துகள்

நடைபெறுகின்றபோது, அந்த விபத்தில் காயம் அடைந்தவர்களை அருகிலுள்ள, வெளி மாநிலங்களான பெங்களூரு போன்ற இடங்களில் உள்ள தனியார் மருத்துவமனைகளுக்கு அந்த நோயாளிகள் அனுப்பப்படுகிறார்கள் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவது தவறு. அந்தத் தகவல் தவறான தகவல் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முதல் விபத்து நடந்தபோது, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அறிவுரையின்படி, நானும், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்களும் சம்பவம் நடந்த இடத்திற்கு உடனடியாகச் சென்று, அத்துணை பேரையும் பார்த்தோம். இரண்டாவது விபத்து நடந்தபோதும், நாங்கள் மூன்று அமைச்சர்களும் சம்பவ இடத்திற்குச் சென்று பார்த்தோம். முதல் விபத்தில் பாதிக்கப்பட்டவர்கள் 33 பேர். அந்த 33 பேரில் 30 பேர் கிருஷ்ணகிரி, அரசு தலைமை மருத்துவமனையிலே அனுமதிக்கப்பட்டு, சிகிச்சைக்குப் பின்னர் அவர்கள் நலமுடன் வீடு திரும்பினர் என்ற நல்ல செய்தியை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மூன்று பேர் மட்டும் refer செய்யப்பட்டார்கள். அதில் ஒருவர் பெங்களூரு நகரத்தைச் சேர்ந்தவர் என்பதால் அவருடைய விருப்பத்தின்பேரில் பெங்களூருக்கு refer செய்யப்பட்டார்.

இரண்டாவது விபத்தில் காயம் அடைந்தவர்களில், ஓசூர் மருத்துவமனையிலே 7 பேர் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர். கிருஷ்ணகிரியிலே உள்ள அரசு தலைமை மருத்துவமனையில் 22 பேர் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர். மொத்தம் 29 பேர். கிருஷ்ணகிரி மற்றும் ஓசூர் அரசு மருத்துவமனைகளிலேயே சிகிச்சை அளிக்கப்பட்டு, அவர்கள் நலமுடன் வீடு திரும்பினர்.

பொதுவாக, விபத்துகள் நடக்கின்றபோது, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு வேகமாக, துரிதமாகச் செயல்பட்டு, 108 ஆம்புலன்ஸ் மருத்துவக் குழு, காவல் துறை, தீயணைப்புத் துறை, வருவாய்த் துறை ஆகிய அத்துணை துறையினரும் உடனடியாகச் சம்பவம் நடைபெற்ற இடத்திற்குச் சென்று, Golden Hour, Platinum Minutes என்று சொல்லக்கூடிய அந்த நேரத்திற்குள்ளாகவே,

2016 ஆகஸ்ட் 11] [டாக்டர் சி. விஜய பாஸ்கர்]

நோயாளிகளை உடனடியாக அரசு மருத்துவமனைக்குக் கொண்டு சென்று, அவர்களுக்கு உயர்தர சிகிச்சை அளிக்கப்பட்டு, மிகவும் சிறப்பாக அவர்களுடைய உயிர்கள் காப்பாற்றப்பட்டுக் கொண்டிருக்கின்றன. விபத்துகளைத் தடுப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு எடுக்கும் நடவடிக்கைகளோடு மக்கள் நல்வாழ்வுத் துறையும் இணைந்து செயலாற்றிக் கொண்டிருக்கிறது.

ஒரு விஷயத்தை நான் அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு அம்மா அவர்கள் எடுத்த பல்வேறு நடவடிக்கைகளை மாண்புமிகு உறுப்பினர் அவர்களே குறிப்பிட்டிருக்கிறார்கள். மாண்புமிகு நிதி அமைச்சர் சமர்ப்பித்த இந்த பட்ஜெட்டில், 10 கோடி ரூபாயை விபத்து காய சிகிச்சைப் பிரிவை வலுப்படுத்துவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு ஒதுக்கியுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) ஏற்கெனவே கிருஷ்ணகிரியிலும், ஓசூரிலும் விபத்து காய சிகிச்சை மையம் செயல்படுகிறது. இந்தச் சிகிச்சைப் பிரிவை, Strengthening of Accident Trauma Centre என்ற விபத்து காய சிகிச்சை மையத்தை வலுப்படுத்துவதற்கு இந்த பட்ஜெட்டில் 10 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. விரைவிலே அந்தப் பணிகள் தொடங்கும் என்ற நல்ல செய்தியை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மருத்துவக் கல்லூரி என்பது—மாண்புமிகு அம்மா அவர்களின் அரசின் கொள்கை முடிவின்படி ஆண்டிற்கு ஒரு மருத்துவக் கல்லூரி என்ற அடிப்படையிலே, தொடர்ந்து ஒவ்வோர் ஆண்டும் ஒரு மருத்துவக் கல்லூரியை அறிவித்து, நிதியொதுக்கி, அதை மிகச் சிறப்பாகச் செயலாற்ற அனுமதி பெற்றுக்கொண்டிருக்கிறோம். இந்தியாவிலேயே மிக அதிகமான மருத்துவக் கல்லூரிகள் தமிழ்நாட்டிலேதான் இருக்கின்றன. அதுமட்டுமல்லாமல், 810 மருத்துவ இடங்களைக் கூடுதலாகப் பெற்றிருக்கின்றோம்.

ஆகவே, எங்கே விபத்து நடந்தாலும் 108—ஆம்புலன்ஸ் வாகனம் செல்லும் நேரத்தை மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்த்தால், இன்றைக்கு ஆந்திராவில் விபத்து நடந்தால், response time 24 நிமிடங்கள், தெலுங்கானா மாநிலத்தில் 24 நிமிடங்கள், குஜராத் மாநிலத்தில் 18 நிமிடங்கள் என்று உள்ளது. ஆனால்,

தமிழ்நாட்டிலே response time *17 நிமிடங்களாக இன்றைக்கு இந்தியாவிலேயே குறைவாக இருக்கிறது. குறைந்த நேரத்தில்தான் (மேசையைத் தட்டும் ஒலி) 108 ஆம்புலன்ஸ் வாகனம் செல்கிறது. மாண்புமிகு அம்மா அவர்கள் அரசு* Geographical Information System (G.I.S.) *என்று சொல்லக்கூடிய உயர் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி, நீங்கள் குறிப்பிட்ட ஓசூர், கிருஷ்ணகிரி நெடுஞ்சாலையில், இந்த மூன்று மாதங்களிலே, இந்த விபத்துகள் நடந்த பின்னர், மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு எடுத்த நடவடிக்கைகளான* dynamic realignment, redeployment, *108 வாகனங்கள் கூடுதலாக அனுமதித்தது மூலமாக இன்றைக்கு அந்த* response time *14 நிமிடங்களாகக் குறைக்கப்பட்டிருக்கிறது.*

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்த இரண்டாவது விபத்தில் ஏழு பேர்தான் spot dead. *ஆனால், காயமடைந்த அத்துணை பேரையும் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு காப்பாற்றியுள்ளது. கிருஷ்ணகிரி அரசு மாவட்டத் தலைமை மருத்துவமனை, மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு இணையான மருத்துவமனை. ஆக, விபத்து நடந்தால் அங்கு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைதான் வேண்டும் என்பதல்ல. மருத்துவக் கல்லூரிக்கு இணையான அத்துணை வசதிகளையும் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு மாவட்டத் தலைமை மருத்துவமனைக்கு வழங்கி இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) உயிர்கள் காப்பாற்றப்பட்டுக் கொண்டிருக்கின்றன. விபத்து நடக்கின்ற வேகத்தைவிட, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு வேகமாக, துரிதமாக, அதைவிடக் கூடுதல் வேகத்திலே, மின்னல் வேகத்திலே அங்கே நடவடிக்கை எடுத்து உயிர்கள் காப்பாற்றப்பட்டுக் கொண்டிருக்கின்றன என்பதைப் பணிவோடு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

முற்பகல் 11–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2016–2017 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும். (குறுக்கீடு) ஒரு கேள்விதான் இன்றைக்கு; 1 கேள்விதான். 2 உறுப்பினர்கள் கேட்டிருக்கின்றீர்கள். 2 உறுப்பினர்கள் கேட்டதால், ஒருவருக்கு ஒரு கேள்விதான், அதற்குமேல் இல்லை, நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும்.*

2016 ஆகஸ்ட் 11] [பேரவைத் தலைவர்]

(குறுக்கீடு) மானியக் கோரிக்கை எண் 27–தொழில் துறை. மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) சொல்வதைக் கேளுங்கள், விதிகளின்படி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுக்கு இரண்டு கேள்விகள். ஒன்றுக்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் கேட்டால், ஒவ்வொருவருக்கும் ஒரு வாய்ப்புதான் தரப்படும், அதற்குமேல் இல்லை. (குறுக்கீடு) திரு. செங்குட்டுவன், நீங்கள் எவ்வளவு கேட்டாலும் அவ்வளவுதான், அமைதியாக உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள்.

4. மானியக் கோரிக்கைகள், 2016–2017, விவாதமும் வாக்கெடுப்பும்–*தொடர்ச்சி*

(அ) கோரிக்கை எண் 27 தொழில் துறை

(ஆ) கோரிக்கை எண் 44 குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை.

(அ) கோரிக்கை எண் 27 தொழில் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2016–2017 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகளின்மீது விவாதமும், வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 27–தொழில் துறை. மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அகத்தில் அன்புடனும், புறத்தில் பண்புடனும், (குறுக்கீடு) பிரமிக்கும் திறமையுடனும் பிரகாசிக்கும் எங்கள் தாயே, (மேசையைத் தட்டும் ஒலி) உண்ணாது உழைத்து, உறங்காது விழித்து தமிழ் மண் ஆளும் அரசியே, தருமத்தின் திருவுருவே, புனிதத்தின் மறு உருவே, ஈகைக்கும், வாகைக்கும் இலக்கணமானவரே, உழைப்பதற்கு இல்லை ஓய்வு, தொண்டுக்கு இல்லை தொய்வு என்று வாழ்ந்து வருபவரே, மாண்புமிகு இதய தெய்வம், டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதம் பணிந்து வணங்குகின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,